வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 234 of 2003

வழக்கு சாட்சி - PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கவேலு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | காளியண்ணன் | தொழில் | : | Superintendent of RMS (Retired) |
| கிராமம் | : | ஒண்டிபுதூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | சூலூர் | வயது | : | 74 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18.03. 2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை தொடர்ச்சி** **நாள் : 18. 03. 2025**

அஞ்சலகத்தில் பரிமளா என்பவர் இருந்தார் அவரது பாஸ்புத்தகத்தை பெற்று சரிபார்த்தபோது அவரது கணக்கு 303892 அவரது பாஸ்புத்தகத்தையும், லாக்புக்கையும் சரிபார்த்தேன். அதில் 23 டெபாசிட்கள் இருந்தது 10.07.1995 ம் தேதி 1000/-ரூபாய் டெபாசிட் செய்திருந்ததை அஞ்சலக அலுவலக முத்திரையிட்டு ராஜன் பெற்றிருக்கிறார். ஆனால் தினசரிவரவு செலவு பதிவேடு (Longbook)ல் கணக்கில் கொண்டு வரவில்லை. 17.07.1995 ல் 2000 ரூபாயும், 24.07.1995 த்தில் 1000 ரூபாயும், 31.07.1995 ல் 1000 ரூபாயும், 09.08.1995 ல் 1000 ரூபாயும் 14.08.1995 ல் 500 ரூபாயும் 16.08.1995 ல் 1000 ரூபாயும், 21.08.1995 ல் 1000 ரூபாயும் 05.09.1995 ல் 2000 ரூபாயும்,22.09.1995 ல் 1000 ரூபாயும், 30.09.1995 ல்1000 ரூபாயும், 10.10.1995 ல் 1000 ரூபாயும், 16.10.1995 ல் 1000 ரூபாயும், 17.10.1995 ல் 1000 ரூபாயும், 20.10.1995 ல் 1000 ரூபாயும், 25.10.1995 ல்3000 ரூபாயும், 06.11.1995 ல் 3000 ரூபாயும், 20.11.1995 ல் 1000 ரூபாயும் 29.11.1995 ல் 1000 ரூபாயும், 11.12.1995 ல் 1000 ரூபாயும், 08.01.1996 ல் 2000 ரூபாயும், மேலும் 26.05.1995 ல் 1000 ரூபாயும் 03.06.1995 ல் 1000 ரூபாயும் கட்டியுள்ளதாகவும் அவரது இருப்பு தொகை ரூ.35,346/- ரூபாய் என்று 08.01.1996 தேதியில் உள்ளது. ஆனால் அதே தேதியில் போஸ்ட் ஆபிஸ் லெச்சர் கணக்கில் பரிமளா கணக்கில் 4346 மட்டுமே இருப்பு தொகையாக காண்பிக்கப்பட்டுள்ளது அதனால் பரிமளாவின் கணக்கிலிருந்து ரூ.31,000/- தொகையை ராஜன் அஞ்சலக கணக்கில் கொண்டுவராமல் கையாடல் செய்துவிட்டார் என்பது

தெரியவருகிறது. பரிமளாவின் பாஸ்புத்தகம், லெச்சர் பதிவேடு, எனது விசாரணையில் போஸ்ட் கிளார்க் ராஜன் கொடுத்த வாக்குமூலம், போஸ்ட் மாஸ்டர் சி.ஆர் மணி கொடுத்த வாக்கு மூலம் மற்றும் கணக்கு வைத்திருந்த பரிமளாவின் வாக்குமூலம் அடங்கிய கோப்பு **அ.சா.ஆ.1** ஆகும். அதேபோல் அஞ்சலகத்திற்கு வந்திருந்த வெங்கடாசலம் என்பவரின் கணக்கு எண்.301256 ஆகும். அவரின் பாஸ்புத்தகத்தை பெற்று அலுவலக பதிவேட்டுடன் சரிபார்த்த போது 26.09.1995 ல் 150 டெபாட்சிட் பெற்ற தொகையை அவரது பாஸ்புத்தகத்தில் அஞ்சலக அலுவலக முத்திரையிட்டு ராஜன் பெற்றிருக்கிறார். ஆனால் தினசரிவரவு செலவு பதிவேடு (Long book)ல் கணக்கில் கொண்டு வரவில்லை. 04.10.1995 ல் 550 ரூபாயும், 17.10.1995 ல் 800 ரூபாயும், 14.11.1995 ல் 2000 ரூபாயும் 12.12.1995 ல் 400 ரூபாயும் ஆக மொத்தம் ரூ. 3900/-ஐ பாஸ்புத்தகத்தில் அஞ்சலக அலுவலக முத்திரையிட்டு ராஜன் பெற்றிருக்கிறார். ஆனால் தினசரி வரவு செலவு பதிவேடு (Long book)ல் கணக்கில் கொண்டு வரவில்லை. 25.09.1995 அன்று ரூ.12000/-த்தை போர்ஜரி ஸ்லிப் மூலமாக ராஜன் எடுத்துள்ளார். அந்த பதிவானது லெச்சரில் உள்ளது கணக்காளரின் பாஸ்புத்தகத்தில் பதிவு இல்லை. அதன்படி அவர் ரூ.15900-/-ரூபாய் கையாடல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது. வெங்கடாசலத்தின் பாஸ்புத்தகம், லெச்சர் பதிவேடு, எனது விசாரணையில் போஸ்ட் கிளார்க் ராஜன் கொடுத்த வாக்குமூலம், போஸ்ட் மாஸ்டர் சி.ஆர் மணி கொடுத்த வாக்கு மூலம் மற்றும் கணக்கு வைத்திருந்த வெங்கடாசலத்தின் வாக்குமூலம் அடங்கிய கோப்பு **அ.சா.ஆ.2** ஆகும்.

(நீதிமன்ற நேரமின்மை காரணமாக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/-க.சித்ரா,
நீதித்துறை நடுவர்,
பல்லடம்.